| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **08/05/2024** | முதல் | **12/05/2024** |
| | அறிக்கை எண் : | **037/ 2024** | வெளியீட்டு நாள் : | **07/05/2024** | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 29° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை (02.5.2024 முதல் 06.05.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 12-05-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/05 | 03/05 | 04/05 | 05/05 | 06/05 | **தேதி** | **நாள்-1** 08/05 | **நாள்-2** 09/05 | **நாள்-3** 10/05 | **நாள்-4** 11/05 | **நாள்-5** 12/05 |
| 5.4 | 0.0 | 0.4 | 0.0 | 12.9 | மழை (மி.மீ) | 5 | 28 | 32 | 7 | 7 |
| 41 | 42 | 40 | 41 | 42 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 41 | 40 | 38 | 38 | 38 |
| 29 | 29 | 29 | 29 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 29 | 28 | 26 | 26 | 25 |
| 3 | 6 | 3 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 8 | 8 | 7 | 7 |
| 60 | 76 | 77 | 56 | 56 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 60 | 70 | 80 | 80 |
| 34 | 54 | 45 | 38 | 41 | | 30 | 30 | 40 | 40 | 50 |
| 8 | 8 | 7 | 13 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 6 | 8 | 8 | 6 |
| தெற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு | தெற்கு | காற்றின் திசை | **வட மேற்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தெற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 8, 11, 12 தேதி லேசான மழையும் மற்றும் 9, 10 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 29° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடமேற்கு, தென்கிழக்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்

## பொது ஆலோசனை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 8, 9 தேதி கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும்,

விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மே 8 மற்றும் 9 தேதி இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**விவசாயம் :**
மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு (08.05.2024 மற்றும் 09.05.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கொய்யா, முருங்கை, கால்நடை.**

**கொய்யா:**
கொய்யா பழப் பயிரில் நுண்ணூட்டச்சத்துக் குறைபாடு தென்படுகின்றது. நூண்ணோட்டச்சத்துக் குறைபாட்டினால், இலைகள் சிறுத்து, கணுக்களிடையே இடைவெளி குறைந்து செடிகள் குத்துச் செடிகள் போல தோற்றமளிக்கும்,

மேலும் இலைகள் வெளிர் நிறமாகி ஓரங்கள் கருகியது போன்ற தோற்றம் அளிக்கும். அதனை நிவர்த்த செய்ய பத்து லிட்டர் தண்ணீரில் துத்தநாக சல்பேட், மக்னீசியம் சல்பேட் மற்றும் மாங்கனீஸ் சல்பெட் ஆகியவை 25 கிராம் எடுத்து அதனுடன் 50கிராம் போராக்ஸ் கலந்து தெளிக்கவும்.

மேலும் 25 கிராம் காப்பர் சல்பேட் மற்றும் பெர்ரஸ் சல்பேட் ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில்; கரைத்து அதனுடன் 10மில்லி ஒட்டும் திரவம் கலந்து புதிய தளிர்கள் தோன்றும் போது ஒரு முறையும், ஒரு மாதம் கழித்து மறு முறையும், பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் தருணம் என நான்கு முறை தெளிக்க வேண்டும்.

**முருங்கை:**
தற்போதைய வளர்ச்சி நிலையில் செடி முருங்கையில் களைக்கட்டுப்பாடு மற்றும் பின் செய் நேர்த்தி முறைகளை கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அதாவது விதைத்து இரண்டு மாதங்கள் வரை நிலத்தை களையின்றி பராமரிக்க வேண்டும் .பின் செடிகள் மூன்றடி உயரம் வளர்ந்த பிறகு மாதம் ஒரு முறை அல்லது தேவைப்படும் போது களையெடுக்க வேண்டும்.

மேலும் செடிகள் சுமார் 1 முதல் 2 மீட்டர் உயரம் வளர்ந்தவுடன் நுனியைக்கிள்ளி விட வேண்டும். இவ்வாறு செய்வதனால் பக்கக்கிளைகள் அதிகமாகத் தோன்றி பூக்கள் மற்றும் காய்ப்பு அதிகரிக்கும். செடியின் உயரமும் குறைந்து அறுவடைக்கு வசதியாக இருக்கும்

**கால்நடை:**

சமீப நாட்களில் ஆங்காங்கே கோடைமழை பெய்துள்ள நிலையில் வைக்கோல் மற்றும் மக்காச்சோள தட்டை போன்ற தீவன பொருட்களில் பூஞ்சாணத் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

வைக்கோல் மற்றும் சோளத்தட்டைகளை வெயிலில் நன்கு உலரத்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் போன்ற நச்சு பூஞ்சாணங்களின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம்.